**அத்தனகல்ல பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அத்தனகல்ல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபை நிதியத்தில் இருந்து நிர்மாணிக்கப்பட்ட ஹெரகொல்லாகம தாய் / சேய் விடுதியின் பாதுகாப்பு வேலிக்காக மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 1,714,526 தொகை கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 1,640,302 பெறுமதியான 03 சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | வெயான்கொடை பழைய சந்தையின் பெறுமதி ரூபா 1,004,016 தொகை சொத்துக் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்டிருந்த அமுல்படுத்தப்படாத ரூபா 5,253,187 தொகையான 13 செயற்திட்டங்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 74,869 பெறுமதியான 02 வேலை வைப்புக்கள் வைப்புக் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | 02 மாகாண சபை செயற்திட்டங்களுக்கும் 03 கம்பெரலிய செயற்திட்டங்களுக்கும் உரிய முறையே ரூபா 37,813, மற்றும் ரூபா 527,006 தொகைகள் கடன்கொடுத்தோர் கணக்கில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | 05 சபை செயற்திட்டங்களுக்குரிய ரூபா 1,232,022 தொகை கடன்கொடுத்தோர் கணக்கில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) | சபையின் உறுப்பினர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,310,000 பெறுமதியான 53 கையடக்க தொலைபேசிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட 08 செயற்திட்டங்களுக்கு உரிய மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 26,642,865 தொகை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.2 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்துகின்ற கடிதம், பட்டோலைகள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 184,569,452 தொகையான நான்கு சொத்து விடயங்கள் மற்றும் இரண்டு பொறுப்பு விடயங்கள் என்பவற்றை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகளை கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவேடுகள் நாளது வரையாக்கப்படுகின்றது. |

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நானாவித வைப்புக்களின் ஆரம்ப மீதியில் ரூபா 2,685,847 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | ஆரம்ப மீதியின் வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். | ஆரம்ப மீதியை முன்கொண்டு செல்லும் போது ஏற்பட்ட இந்த வேறுபாடு மீண்டும் பரீட்சிக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1946 இன் 30 ஆம் இலக்க வாடகை மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் 20 ஆம் பிரிவு. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதன வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 02 உப அலுவலகங்களில் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதன வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஆதன வரி மதிப்பீட்டிற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396(இ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய ரூபா 65,760 பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(1) மற்றும் (2) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 9,744,812 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை. | 356 கடைகளில் இருந்து 05 வருடங்களுக்கு ஒரு தடவை புதிய மதிப்பீட்டு அறிக்கை, 02 உப அலுவலகங்களுக்குரிய 108 கடைகளுக்கு மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | கடை வாடகை மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது . |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,299,307 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,574,937 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 25,000 பெறுமதியான மதிப்பிழந்த காசோலையொன்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிழந்த காசோலைக்காக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதில் நிறுவனத்திற்கு நிதி நட்டமொன்று ஏற்பட்டிருக்கவில்லை. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 27,824,000 | 29,744,802 | 30,296,026 | 24,794,194 | 26,326,000 | 30,025,147 | 29,610,416 | 27,194,998 |
| (ii) | வாடகை | 27,852,000 | 20,097,604 | 20,164,792 | 1,674,408 | 16,421,000 | 17,390,062 | 18,623,858 | 1,401,952 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,305,000 | 1,426,674 | 1,426,674 | - | 1,723,000 | 1,507,520 | 1,710,478 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 99,927,000 | 100,263,916 | 78,737,842 | 122,676,645 | 85,185,000 | 85,045,651 | 104,317,836 | 105,270,206 |
| | | 156,908,000 | 151,532,996 | 130,625,334 | 149,145,247 | 129,655,000 | 133,968,380 | 154,262,588 | 133,867,156 |

### 2.3.2 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெயான்கொடை உப அலுவலகத்திற்குரிய 27 கடைகளில் இருந்து அறவிட வேண்டிய 10 வருடங்களை விட பழைய ரூபா 3,863,080 தொகையான முற்கொடுப்பனவு மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்கொடுப்பனவு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைகளுக்காக உடன்படிக்கையொன்று காணப்படாமையின் காரணமாக உரித்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மினுவாங்கொடை உப அலுவலகத்திற்குரிய 42 கடைகளில் இருந்தும் எகொடபொத உப அலுவலகத்திற்குரிய 82 கடைகளில் இருந்தும் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய வியாபார நிலைய வாடகை ரூபா 1,609,587 ஆகும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை விருத்தி செய்தல் வேண்டும். | அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 17 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 19 விடயங்களுக்காக உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) செயல்நடவக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டுள்ள உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 08 இலக்குகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்ற வேண்டிய பணிகள் சகலதும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி தேவையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு விரைவாக சமர்ப்பிக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதார வசதிகளை கட்டியெழுப்புவதற்கான நீண்ட கால திட்டம் 2018-2022 வரை மாத்திரம் | நிலைபேறான அபிவிருத்தி திட்டம் உரிய காலப் பகுதியின் போது நிறைவேற்றப்பட வேண்டும். | அந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குத் திட்டத்தின் செயல்முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

தயாரிக்கப்பட்டிருந்தது. வறுமையில் வாழும் மக்களுக்கு நிதிஉதவிகளை வழங்குவதன் கீழ் 14 வறிய குடும்பங்களுக்கு சீலிங் தகரங்களை வழங்குவதற்கும் பகல் காப்பு நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கும் ஆன செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிட்டம்புவ விளையாட்டரங்கின் விளையாட்டுக்கூடம் மற்றும் அதில் விற்பனை கடைகளை ஸ்தாபித்தல் போன்றவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமூக சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2019 ஆகஸ்ட் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 690,030 பெறுமதியான 615 கதிரைகளில் 50 கதிரைகள் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்து கால ரீதியில் விநியோகித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் அந்த எஞ்சிய கதிரைகளை சமூக சபைகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 04 வருமான பரிசோதகர் பதவிகள் 2010 மற்றும் 2015 ஆம் ஆண்டிலிருந்தும், ஆரம்ப பிரிவின் 11 பதவிகள் 2019 ஆம் ஆண்டில் இருந்தும் வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்பப் பிரிவின் வெற்றிடங்களை நிரப்புதல் தேர்தல் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) முகாமைத்துவ உதவியாளர் சேவையில் ஒரு பதவியொன்று மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்று என்பன 2018 ஆம் ஆண்டிலிருந்து மிகையாக காணப்பட்டது. | மிகை பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி மிகையாக உள்ளது. |

**(இ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01 – 10 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடன் ரூபா 179,231 ஆகும். | கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கடன் மீதிகளுக்கு இடையே ரூபா 16,337 தொகைக்கு உரியவரிடம் இருந்தான தகவல்களை கண்டறிய முடியாமல் உள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 71 பொதுக் காணிகளின் எல்லைகளை இனங்கண்டு பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளுக்காக பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நிர்மாண பரீட்சிப்பு** | | |
| மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 748,770 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட உடுகொட கொரக கிணறு எந்தவொருவரும் பயன்படுத்தப்படாத கிணறாக இருந்தமையால் இதற்காக செய்யப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | ஆக்கபூர்வமான பணிகளுக்காக சபை நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டும். | வறட்சி காலங்களின் போது மக்களுக்கு இந்த கிணறை பயன்படுத்தக் கூடிய வகையில் சமூக சபைகளின் ஒத்துழைப்புடன் சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |